1991 சனவரி 25]

மணி 9-20

இலவச மருத்துவ சிகிச்சை

* 5272—திரு. பொன். விஜயராகவன் :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை மாநகரில் பணியாற்றும் ஆட்டோ ரிக்ஷா, டாக்சி, லாரி டிரைவர்களுக்கு இலவச மருத்துவ சிகிச்சை அளிக்க மாநகரக் காவல் துறை நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், மற்றைய மாவட்டங்களுக்கும் இத் திட்டம் விரிவுபடுத்தப்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) 1989 ஆம் ஆண்டு 20—3—1989 முதல் 26—3—1989 வரை கொண்டாடப்பட்ட "சாலைப் பாதுகாப்பு வார" விழாவின்போது ஆட்டோ ரிக்ஷா, டாக்சி மற்றும் இதர வாகன ஓட்டுநர்களுக்கு இலவசமாக மருத்துவப் பரிசோதனை செய்யப்பட்டது.

(ஆ) வடாற்காடு-அம்பேத்கார், கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி–கட்டபொம்மன் ஆகிய மாவட்டங்களில் மட்டும் இலவச கண் சிகிச்சை முகாம் நடைபெற்றது. இதைத் தவிர மருத்துவ சிகிச்சை அளிப்பதற்கான வேறு எந்தத் திட்டமும் பரிசீலனையில் இல்லை.

திரு. கே. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆட்டோ ரிக்ஷா போன்ற இப்படிப்பட்ட தொழிலிலே ஈடுபட்டிருக்கக்கூடிய சிதறிக் கிடக்கும் தொழிலாளர்கள்—'அன்-ஆர்கனைஸ்ட் ஒர்க்கர்ஸ்' இவர்களுக்கு எந்த சமூகப் பாதுகாப்புச் சட்டங்களும் அமலாகாது இருந்து கொண்டிருக்கின்றன என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். ஆகவே ஒருசில முகாம்கள் நடத்தி மருத்துவ சிகிச்சை மட்டுமல்ல, அவர்களுக்கு சமூகப் பாதுகாப்பு, மருத்துவ சிகிச்சை உட்பட சட்டப்பூர்வமாக சில நடவடிக்கைகளை அமலுக்குக் கொண்டு வருவதற்கு அரசு ஏதாவது திட்டத்தை முன் வைக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டு விபத்திலே இறந்து போகின்ற சூழ்நிலை ஏற்பட்டால் தற்போது நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கின்ற திட்டப்படி அவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்கக் கூடிய ஒரு திட்டம் ஏற்கெனவே நடைமுறையில் இருந்து கொண்டிருக்கிறது. ஆனால் மருத்துவப் பரிசோதனை பொறுத்தவரையில் ஆங்காங்கு சாலைப் பாதுகாப்பு வார விழாவின்போது சில மாவட்டங்களில் செய்திருக்கின்றார்கள். பல மாவட்டங்களில் அது நடைமுறைக்கு வரவில்லை. வருகின்ற ஆண்டில், வருகின்ற மார்ச் மாதத்தில் சாலைப் பாதுகாப்பு வார விழா என்று கொண்டாடும்போது எல்லா மாவட்டங்களிலும் திட்டமிட்டு ஆங்காங்கே இருக்கக்கூடிய பெரிய மருத்துவமனைகள், அரசு மருத்துவமனைகள், தனியார் சேவை நிறுவனங்கள் இவைகளையெல்லாம் ஒருங்கிணைத்து இப்படிப்பட்ட திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அரசு முயற்சிகளை மேற்கொள்ளும்.

அனுமதி பெறாத மனைப் பிரிவுகளிலுள்ள வீடுகளுக்கு அங்கீகாரம்

** 9182—திரு. மீ. அ. வைத்தியலிங்கம் :*

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

அனுமதி பெறாத மனைப் பிரிவுகளில் கட்டப்பட்டுள்ள வீடுகளுக்கு வரி மட்டும் வசூல் செய்யும் உள்ளாட்சிகள், அவைகளுக்குச் சாலைகள், விளக்குகள், குடிநீர் போன்ற வசதிகள் செய்து மனைகளை அங்கீகாரம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

19—4—1989 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், *1—1—1989* ஆம் தேதியில் சொத்து வரி வசூலிக்கப்படுகிற அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளில் உள்ள சாலைகள் அனைத்தையும் நகராட்சிகள் எடுத்துக் கொண்டு அந்த மனைப் பிரிவுகளில் குடியிருப்போருக்கு சாலை வசதி, விளக்கு வசதி மற்றும் குடிநீர் வசதி போன்ற அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கும் என்று அறிவிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் நகராட்சி நிர்வாக இயக்குநர் மற்றும் நகர் ஊரமைப்பு இயக்குநர் ஆகியோரின் செயற்குறிப்புகள் அரசின் தீவிரப் பரிசீலனையில் உள்ளது.